**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **111/2022** |
| | | P/ W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | அமுதவாணி | CASTE | : | – |
| D/O | நடராஜன் | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | டி.ஆண்டிப்பட்டி | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | **47** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.06.2025**

**குறுக்கு விசாரணை**

1. 1ம் வாதி எனது தாயார். 3ம் வாதி எனது தம்பி. நான் எனது தாயார் மற்றும் எனது தம்பி ஆகியோர் கூட்டுக்குடும்பமாக ஒரே வீட்டில் வாழ்ந்து வருகிறோம். இந்த வழக்கை தாக்கல் செய்ய எனது வழக்கறிஞருக்கு தகவல் நான் தான் சொன்னேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள தகவல்களை நான் தான் எனது வழக்கறிஞருக்கு சொன்னேன். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்குமுன் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் பட்டா கேட்டு ஒரு மனுவை எனது தாயார் தாக்கல் செய்தார். மேற்படி மனுவை தவிர எனது தாயார் எத்தனை மனுக்கள் தாக்கல் செய்தார் என்றால் எனக்குத்தெரியாது.

2. நான் ஆண்டிப்பட்டி மெயின் ரோட்டில் தான் குடியிருக்கிறேன். இறந்த ராமச்சந்திரன் எனது தாய்மாமன் ஆவார். அவர் இறந்தபோது அவருக்கு சுமார் 83, 84 வயதிருக்கும். வா.சா.ஆ.2 ஆவணத்தில் ராமச்சந்திரன் இறந்தபோது அவருக்கு 84 வயது என்றால் சரிதான். ராமச்சந்திரன் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்று 20 வருடங்கள் இருந்தார். நான் 7ம் பிரதிவாதி சார்பதிவாளரிடம் வழக்குச்சொத்தில் யாரும் வில்லங்கம் செய்யக்கூடாது என்று 06.09.2021 தேதியில் மனு கொடுத்தேன் என்றால் சரிதான்.

3. சார்பதிவாளரிடம் என்ன ஆட்சேபணை சொல்லி மனு கொடுத்தேன் என்று எனக்குத்தெரியாது.

எனது ஆட்சேபணை மனுவில் ராமச்சந்திரன் எழுதிய உயில்பற்றி குறிப்பிட்டிருந்தேன் என்றால் சரிதான். அந்த ஆட்சேபணை மனு கொடுத்தபோதுதான் முதல்முதலாக உயிலைபற்றி சொன்னேன், என்றால் சரிதான். அதற்கு முன்புவரை உயில் பற்றி யாருக்கும் தெரியாது என்றால் உயிலைப்பற்றி நான் யாருக்கும் சொல்லவில்லை.

**மேலும் குறுக்கு விசாரணை செய்ய் ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.